**சுருக்கம்**

தொழில் – விதி 110ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – தமிழ்நாடு உப்பு நிறுவனம் – நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் தனியார் நிறுவனத்துடன் இணைந்து கூட்டாக காஸ்டிக் சோடா தொழிற்சாலையை தமிழ்நாடு உப்பு நிறுவனம் துவங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தொழில் (எம்.ஐ.எப்.2) துறை</u>

அரசாணை (நிலை) எண்.240

நாள் : 30.09.2015
மன்மத, புரட்டாசி –13
திருவள்ளுவர் ஆண்டு 2046

**ஆணை:**

29.09.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு உப்பு நிறுவனம் தொடர்பாக கீழ்க்கண்ட தொழில் வளர்ச்சி திட்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் தனியார் நிறுவனத்துடன் இணைந்து கூட்டாக காஸ்டிக் சோடா தொழிற்சாலையை தமிழ்நாடு உப்பு நிறுவனம் துவக்கும். இத்தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 36000 மெட்ரிக் டன் காஸ்டிக் சோடா உற்பத்தி செய்யப்படும். இத்திட்டம், சுமார் 200 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

2. மேற்காணும் திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு தேவைப்படும் நிதியினை பெறுவதற்கும் உரிய நடவடிக்கையினை எடுக்குமாறும் மற்றும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்புமாறும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு உப்பு நிறுவனம் அவர்களை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. வி. சங்கர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு உப்பு நிறுவனம்,
735, அண்ணா சாலை, சென்னை–600 002.
நகல்
சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத்துறை, சென்னை–600 009.
தொழில் (அ.ந.மு.2/வ.செ.தி.1) துறை, சென்னை– 600 009.
இ.கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30.9.2015
பிரிவு அலுவலர்